## August 13, 2025 - *தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்*

1. *தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா, தேசிய ஊக்கமருந்து தடுப்புதிருத்தச்சட்ட மசோதா (2025) ஆகியவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.*
    - i. *இரு மசோதாக்களும் தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படவுள்ளன. அவரின் ஒப்புதலுக்குப்பிறகு அவை சட்டமாக நடைமுறைப்படுத்தப் படுவதற்கான அறிவிக்கை வெளியிடப்படும்.*
    - ii. *உலகளவவில் ஏற்கெனவே 20 நாடுகள் விளையாட்டுத் துறைக்கென பிரத்யேக சட்டங்களைக் கொண்டுள்ளன. அந்தப் பட்டியலில் தற்போது 21- ஆவது நாடாக இந்தியா இணையவுள்ளது.*
    - iii. *புதிய மசோதாக்களின் மூலமாக, விளையாட்டுத் துறையானது போட்டியாளர்களை மையப்படுத்தியதாக இயங்கும்.*
2. *இந்திய துறைமுகங்கள் சட்ட மசோதா-2025 மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் தடங்கள் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தாக்கல் செய்தார்.*
    - i. *இம்மசோதா, துறைமுக வளர்ச் சிக்கான ஒருங்கிணைப்பை ஊக்குவித்து, தொழில் புரிவதை எளிதாக்க வகை செய்கிறது.*
    - ii. *முக்கிய துறைமுகங்கள் தவிர பிறதுறைமுகங்களின் திறன்மிக்க மேம்பாடு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட வளர்ச்சியை வலுப்படுத்த மாநில கடல்சார் வாரியங்களுக்கு அதிகாரமளிப்பதுடன், மத்திய-மாநில அரசு பிரதிநிதிகளுடன் கடல்சார் மாநில மேம்பாட்டு கவுன்சிலை நிறுவவும் வழிவகுக்கிறது.*
3. *சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு-ஒழுங்காற்று தல்) சட்டதிருத்த மசோதா-2025, எதிர்க்கட்சிக்களின் போராட்டத்துக்கு இடையே தாக்கல் செய்யப்பட்டு, சிறிதுநேர விவாதத்துக்குப்பின் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.*
    - i. *தேசிய கனிமங்கள் ஆய்வு அறக்கட்டளையானது, தனது நிதியை இந்தியாவுக்குள் (கடல்பகுதிகள் உள்பட) மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கனியங்கள்-தாதுக்களின் ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பணிக்கு பயன்படுத்த வழிவகுக்கிறது.*
    - ii. *தேசிய கனிமங்கள் ஆய்வு அறக்கட்டளையின் விரிவாக்கப்பட்ட நோக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் அதன் பெயரை தேசிய கனிமங்கள் ஆய்வு மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளைஎன மாற்றவும், குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை,*

காப்புரிமையில் 2 சதவீதம் என்பதில் இருந்து 3 சதவீதமாக அதிகரிக்கவும் வகை செய்கிறது.

4. காப்பீட்டு நிறுவனங்களில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை 100 சதவீதமாக உயர்த்துவது, வேலைவாய்ப்பை உருவாக்கும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை தெரிவித்தார்.

   i. முன்னதாக, கடந்த பிப்ரவரி 1-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை (பட்ஜெட்) தாக்கல் செய்த நிர்மலா சீதாராமன், இந்திய காப்பீடு நிறுவனங்களில் அந்நிய நேரடி முதலீடு வரம்பு 74 சதவீதத்திலிருந்து 100 சதவீதமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

5. இரு அவைகளிலும் புதிய வருமான வரி மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

   i. 1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்துக்கு மாற்றாக கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை மாநிலங்களவையில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.
   ii. அப்போது அவர்பேசுகையில்,1961-ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் சில பகுதிகள் வழக்கொழிந்துவிட்டன. எனவே புதிய சட்டம் தேவைப்படுகிறது.
   iii. இந்த மசோதாவில் புதிய வருமானவரி விகிதங்கள் எதுவும் அறிமுகம் செய்யப்படவில்லை.
   iv. புதிய வருமான வரிச் சட்டத்தில் வார்த்தைகள் எளிமையாக இருக்கும் நோக்கில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது என்றார்.

6. அமெரிக்காவின் வரி விதிப்புகளுக்கு மத்தியில், பிரிட்டனுடன் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் மூலம் இந்திய ஜவுளி ஏற்றுமதியாளர்களுக்குப் புதிய வாய்ப்பு கிடைத்துள்ளது' என்று வர்த்தக அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

   i. இந்தப் புதிய வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்திய ஜவுளி ஏற்றுமதிகளுக்கு பிரிட்டனில் வரி விலக்கு கிடைக்கிறது. இதனால், பிரிட்டனுக்கு வீட்டு உபயோக ஜவுளிகள், தரைவிரிப்புகள், கைவினைப் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் இந்திய நிறுவனங்கள் அதிக லாபம் பெறுவர். வரிச்சுமை நீங்கியுள்ளதால், சீனா, வங்கதேசம் போன்ற பிராந்திய போட்டியாளர்களுடன் அவர்கள் போட்டியிட முடியும்.
   ii. இந்த ஒப்பந்தம் மூலம் பிரிட்டன் ஜவுளி சந்தையில் இந்தியாவின் பங்கை 6.6 சதவீதத்திலிருந்து 12 சத வீதமாகஉயர்த்த முடியும்.

iii. ஒட்டுமொத்தமாக, பிரிட்டனுக்கு ஜவுளி விநியோகம் செய்யும் நாடுகளில் சீனா(25.4 சதவீதம்), வங்கதேசம் (19.9 சதவீதம்), துருக்கிக்கு (7.9 சதவீதம்) அடுத்து 4-ஆவது பெரிய நாடாக இந்தியா (6.6 சதவீதம்) உள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்பால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சமாளிக்கவும், இந்திய ஜவுளித் துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தொழில் வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

7. சீனா மீது அறிவித்த 30 சதவீத வரியை மேலும் 90 நாள்களுக்கு (நவம்பர் 10 வரை) ஒத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.
   i. இந்தியா மீதான 25 சதவீத வரியை அமெரிக்கா ஏற்கெனவே அமல்படுத்திவிட்ட நிலையில், ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதற்காக மேலும் 25 சதவீத வரி வரும் 27-ஆம் தேதிமுதல் அமலுக்கு வரும் என்று அறிவித்துள்ளது.
   ii. சீனா மீதான பரஸ்பர வரி விதிப்பு ஆகஸ்ட் 12-ஆம் தேதி அமலுக்கு வரும் என்ற அறிவித்திருந்த நிலையில், அதை 90 நாள் களுக்கு ஒத்திவைக்கும் உத்தர வில் டிரம்ப் கையொப்பமிட்டுள்ளார்.

8. மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரின் வீடுகளுக்கே ரேஷன் பொருள்களை வழங்கும் 'முதல்வரின் தாயுமான வர்' திட்டத்துக்காக ரூ.35.92 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.
   i. இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15 லட்சத்து 81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 பயனாளர்கள், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத்திறனாளிகள் என மொத்தம் 21 லட்சத்து 70 ஆயிரத்து 454 பேருக்கு அவர்களது இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருள்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.
   ii. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கி ழமைகளில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

9. தலாய் லாமாவை சந்தித்துப் பேசியதற்காக செக் குடியரசு அதிபர் பீட்டர் பாவெலுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டிப்பதாகசீனா அறிவித்தது.
   i. திபெத்தில் பிரிவினையைத் தூண்டுவதாக சீனாவால் குற்றஞ்சாட்டப்படும் தலாய் லாமாவை பீட்டர் பாவெல் கடந்த மாதம் 27-ஆம் தேதி சந்தித்தார்.

10. ஜப்பானில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய அலைச்சறுக்கு (சர்ஃபிங்) போட்டிக்கு இந்திய வீரர்கள் தகுதி பெற்றுள்ளனர்.